உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

• 4 பக்கங்கள் • விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 14.06.2026 • மலர் 04 • இதழ்: 165 • ஞாயிற்றுக்கிழமை • Edition : Nagercoil • 14.06.2026 • Vol : 04 • Issue : 165 • Page : 4 • Rs. 5/-

# பிரதமர் மோடி பிரான்ஸ் பயணம்

## ஜி 7 மாநாட்டில் பங்கேற்கிறார்

புதுடெல்லி, ஜூன் 14

நேற்று முதல் (13.06.2026) முதல் 19ம் தேதி வரை அரசு முறை பயணமாக ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ் மற்றும் ஸ்லோவேக்கியா நாட்டுக்கு பிரதமர் நரேந்திர மோடி செல்ல உள்ளார். இந்தப் பயணத்தின்போது 52வது ஜி7 மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்க உள்ளதாக வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்திருந்தது.

பிரதமர் மோடியின் இந்தபயணத்தின்போது நாளை (14ம் தேதி) பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரானை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார். இதன் மூலம் இந்தியா மற்றும் பிரான்ஸ் இடையிலான உறவை மேலும் வலுவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பயணத்தின் போது ஸ்டார்ட்அப், வென்ச்சர் கேப்பிட்டல் உள்ளிட்ட முதலீடுகளை ஈர்க்கும் வகையிலான புதிய முயற்சிக்கான நிகழ்வில் பிரதமர் மோடி மற்றும் அதிபர் மேக்ரான் பங்கேற்க உள்ளனர்.

அதன் பின்னர் இந்த பயணத்தில் இரண்டாவது நாடாக பிரதமர் மோடி ஸ்லோவேக்கியா பயணிக்கிறார். அந்நாடு விடுதலை (1993) பெற்ற பிறகு இந்திய பிரதமர் மேற்கொள்ளும் முதல் சுற்றுப்பயணமாக இது அமைந்துள்ளது. இந்த பயணத்தில் அந்நாட்டின் பிரதமர் ராபர்ட் பிகோ, ஜனாதிபதி பீட்டர் பெல்லெக்ரினி ஆகியோரை பிரதமர் மோடி சந்திக்கிறார். இந்த பயணத்தின்போது இருதரப்பு வணிகம், முதலீடு, ஆட்டோமொபைல் மற்றும் ரயில்வே உள்ளிட்ட உற்பத்தி துறை சார்ந்து பேச்சுவார்த்தை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்பின்னர் வரும் 16 மற்றும் 17 ஆகிய தேதிகளில் பிரான்ஸ் நாட்டில் நடைபெறும் ஜி7 மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்கிறார். இதில் சர்வதேச அளவிலான பொருளாதார மீட்சி, உலக நாடுகளின் ஒற்றுமை மற்றும் பொறுப்பான ஏஐ பயன்பாடு குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

இந்த மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்களை பிரதமர் மோடி, சந்தித்து பேச வாய்ப்புள்ளது. பின்னர் 18ம் தேதி அன்று பாரீஸ் நகரில் நடைபெறும் இரண்டு நிகழ்வுகளில் பிரதமர் மோடி பங்கேற்கிறார். இதில் பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் மத்தியில் பிரதமர் மோடி உரையாற்ற உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



## 52வது பிறந்த நாள்: தொகுதி மக்கள் மத்தியில் கேக் வெட்டி கொண்டாட முதல்அமைச்சர் ஜோசப் விஜய் திட்டம்!



சென்னை, ஜூன் 14

த.வெ.க. தலைவரும், தமிழகத்தின் முதல்அமைச்சருமான ஜோசப் விஜய், வரும் 22ந் தேதி தனது 52வது பிறந்த நாளை கொண்டாடுகிறார். நீண்ட பல காலமாக நடிகராக பிறந்த நாளை கொண்டாடிய அவர், முதல்அமைச்சராக பதவியேற்ற பிறகு கொண்டாடும் முதல் பிறந்த நாள் இது.

அதனால், இந்த முறை பிறந்த நாளை வித்தியாசமாக முதல்அமைச்சர் ஜோசப் விஜய் கொண்டாட திட்டமிட்டு இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழகத்தில் நடைபெற்று முடிந்த 17வது சட்டசபை தேர்தலில் பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளிலும் த.வெ.க. சார்பில் ஜோசப் விஜய் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின்னர், திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை அவர் ராஜினாமா செய்தார்.

தற்போது, பெரம்பூர் தொகுதி எம்.எல்.ஏ.வாக உள்ள முதல்அமைச்சர் ஜோசப் விஜய்க்கு, வியாசர்பாடி பகுதியில் எம்.எல்.ஏ. அலுவலகம் தயாராகிவருகிறது. இந்த எம்.எல்.ஏ. அலுவலகத்தை, தனது பிறந்த நாளான வரும் 22ந் தேதி திறக்க திட்டமிட்டுள்ள முதல்அமைச்சர் ஜோசப் விஜய், தொகுதி மக்களுடனேயே கேக் வெட்டி பிறந்த நாளை கொண்டாடவும் முடிவு செய்துள்ளாராம்.

மேலும், மாதந்தோறும் குறிப்பிட்ட ஒரு நாளை, தொகுதி மக்களுக்காக செலவிடவும் முதல்அமைச்சர் ஜோசப் விஜய் திட்டமிட்டுள்ளாராம். அன்றைய தினம் தொகுதி மக்களிடம் இருந்து நேரடியாக மனுக்களை பெற்று,

அதன் மீது விரைவாக உரிய நடவடிக்கை எடுக்கவும் அவர் முடிவு செய்துள்ளாராம். தேவைப்பட்டால், பெரம்பூர் தொகுதி கட்சி அலுவலகத்திலேயே முதல் அமைச்சர் ஜோசப் விஜய் தங்கியிருக்கவும் திட்டமிட்டுள்ளாராம். அதனால், அந்த அலுவலகம் தங்கும் வசதியுடனேயே தயாராகி வருகிறதாம்.

## பா.ஜ.க. மீது அதிருப்தி.. த.வெ.க.வில் இணைந்தார் விஜயதரணி



சென்னை, ஜூன் 14

கேரள எல்லையில் அமைந்துள்ளது விளவங்கோடு தொகுதி. காங்கிரஸ்சார்பில்விஜயதரணிபோட்டியிட்டு மூன்று முறை எம்.எல்.ஏவாக வென்ற தொகுதி இது. அவர் பதவிக்காலம் முடியும் முன்பே பா.ஜ.கவில் இணைந்ததுடன் எம்.எல்.ஏ பதவியையும் ராஜினாமா செய்தார்.

விளவங்கோட்டில் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. கட்சிகளுக்கு செல்வாக்கு அதிகம் உண்டு. இந்த சூழலில் கடந்த சட்டமன்ற தேர்தலில் விளவங்கோடு தொகுதியில், காங்கிரஸ் சார்பில் டி.டி.பிரவீன், பா.ஜ.க சார்பில் விஜயதரணி, நா.த.க சார்பில் மரிய ஸ்டெல்லா, த.வெ.க சார்பில் மைக்கேல் குமார் ஆகியோர் போட்டியிட்டனர்.

அதில், இந்திய தேசிய காங்கிரஸ் வேட்பாளர் டிடி பிரவீன் , தமிழக வெற்றிக் கழகம் வேட்பாளர் கே. மைக்கேல் குமாரை விட 20970 வாக்கு வித்தியாசத்தில் வென்றார். இதுவிஜயதரணிக்குஅதிர்ச்சியைஏற்படுத்தி இருந்தது.

மூன்று முறை எம்.எல்.ஏவாக இருந்த விஜயதரணி திடீரெனகட்சிமாறிச்சென்றதும்உள்ளூர்மக்களிடையே அவரது செல்வாக்கு சரிய காரணமாக அமைந்தது. தேர்தல் நேரத்தில் பா.ஜ.கவில் நிர்வாகிகள் முழுமையாக ஒத்துழைக்கவில்லை என ஏற்கெனவே விஜயதரணி அதிருப்தியில் இருந்தார். பாரம்பரிய காங்கிரஸ் வாக்குகள் பெரும்பாலும் கை சின்னத்துக்கு சென்றது. ஆனால், பா.ஜ.க வாக்குகளை அதிகமாக த.வெ.க கைப்பற்றி இருந்தது.

இந்நிலையில் பா.ஜ.க.வில் இருந்து விலகி த.வெ.க.வில் விஜயதாரணி தன்னை இணைத்துக்கொண்டார். சென்னை பனையூரில் உள்ள த.வெ.க. தலைமை அலுவலகத்திற்கு சென்ற அவர், அமைச்சர் என்.ஆனந்த், அமைச்சர் ஆதவ் அர்ஜுனா முன்னிலையில் இணைந்தார். பா.ஜ.க.வில் எந்த பதவியும் வழங்கப்படாதநிலையில் த.வெ.க.வில் அவர் இணைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவருடன் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் பச்சைமால், முன்னாள் எம்.பி.க்கள் பால கங்கா, வனரோஜா,

இளவரசன் மற்றும் அ.தி.மு.க., அ.ம.மு.க. நிர்வாகிகள் என பலரும் இணைந்தனர்.



### தஞ்சாவூர் அருகே

## பூதலூரில் 44 பேருக்கு விலையில்லா வீட்டு மனை பட்டா: கலெக்டர் வழங்கினார்

தஞ்சாவூர் ஜூன் 14

தஞ்சாவூர்மாவட்டம்பூதலூர்தாலுக்கா திருவையாறு சட்டமன்ற தொகுதியை சேர்ந்த கூட நாணல் பகுதியில் உள்ள 44 பேருக்கு விலையில்லா வீட்டு மனை பட்டா வழங்கும் விழா நடைபெற்றது

வீட்டுமனை பட்டாக்களை மாவட்ட கலெக்டர்ரேவதிவழங்கினார்முரசொலி எம்பி, திருவையாறு எம்எல்ஏ துரை சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

விலையில்லா வீட்டு மனை பட்டாக்களை வழங்கிய மாவட்ட கலெக்டர் ரேவதி பேசியதாவது

மக்களின் அடிப்படை தேவை களில் ஒன்றான இருப்பிட தேவை யை பூர்த்தி செய்வதில் வருவாய் துறை மிக முக்கிய பங்குவகிக்கிறது. அதன்அடிப்படையில் தகுதி வாய்ந்த மக்களுக்கு விலையில்லா வீட்டு மனைகளை வழங்கி வருகிறது. தற்போதுகூடநாணல்பகுதியைச்சேர்ந்த 44 பேருக்கு விலை யில்லா வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட்டு உள்ளது இவ்வாறு அவர் கூறினார்

நிகழ்ச்சியில் வருவாய் கோட்டாட்சியர் நித்யா ,திருக்காட்டு பள்ளியில் பேரூராட்சி தலைவர் மெய்யழகன் வட்டாட்சியர் விவேகானந்தன் மற்றும் வருவாய் துறை , பேரூராட்சி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## பத்திரிகையாளர் செய்தி எதிரொலி: குண்டும் குழியுமான சாலையை பார்வையிட்ட தவெக நிர்வாகிகள்



நாகர்கோவில் ஜூன் 14

நாகர்கோவில் மாநகராட்சி 6வது வார்டு பள்ளிவிளை, சானல்கரை செல்லும் சாலை குண்டும் குழியுமாக மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதைக் கண்ட பொது மக்களின் பிரச்சினைகளை அரசின் கவனத்திற்கு எடுத்து செல்வதில் சிறப்பாக பணியாற்றி வரும் பத்திரிகையாளர் ஜாண் புகைபடம் எடுத்து செய்தியாக வெளியிட்டார். அவரின் செய்தி எதிரொலியாக தவெக 6வது வார்டு செயலாளர் மணிகண்டன் மற்றும் நிர்வாகிகள் செய்தியில் சுட்டிக் காட்டப்பட்ட சாலையை பார்வையிட்டனர்.

மேலும் பல ஆண்டுகளாக நாகர்கோவில் மாநகராட்சியால் கண்டுகொள்ளாமல் இச்சாலை விடப்பட்டதின் விளைவாக இப்பகுதி மக்கள்அனுபவித்து வரும் பல்வேறு வேதனைகளை அப்பகுதி மக்களிடம் கேட்டறிந்து இதனை தமிழக முதல்வரின் கவனத்திற்கு எடுத்து செல்வதாக தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து அப்பகுதி கவுன்சிலர் அனுஷா பிரைட்யிடம் இச்சாலை செப்பனிடப்படாமலும், தார் சாலை வசதி செய்து கொடுக்கப்படாமலும் இருப்பதின் காரணத்தை கேட்டறிந்து அவரிடம் உடனடியாக நடவடிக்கை எடுத்து இப்பகுதி மக்களின் போக்குவரத்திற்காக தார் சாலை அமைத்துக் கொடுக்கவும் கோரிக்கை வைத்தனர்.

பொதுமக்களின் அன்றாட தேவைகளான குடிநீர், சாலை வசதி, சுகாதாரம் போன்றவற்றை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும், அதிகாரிகளும் கோரிக்கைகள் வைத்தும் கண்டு கொள்ளாமல் இருந்து வந்த நிலையில் பொதுமக்களின் தேவை அறிந்து அவைகளை அரசிற்கும் அரசு அதிகாரிகளின் பார்வைக்கும் கொண்டு சேர்த்து அரசுக்கும் மக்களுக்கும் ஒரு பாலமாக இருந்து செயல்பட்டது மட்டுமல்லாமல் மக்களின் குரலாக ஒலித்த பத்திரிகையாளர் ஜானின் செயல் பல ஆண்டுகளாக கண்டு கொள்ளப்படாமல் விடப்பட்ட குண்டும் குழியுமான சாலையை தமிழ்நாடு அரசிற்கும் அரசு அதிகாரிகளின் பார்வைக்கும் எடுத்துச் சென்றதின் விளைவாக இப்பகுதிக்கு புதிய தார் சாலை கிடைக்க அப்பகுதியை பார்வையிட்டு நடவடிக்கை எடுக்க முயற்சி செய்த தவெக நிர்வாகிகள்.

## திண்டிவனம்: மக்கள் குறைகேட்கும் நிகழ்ச்சியில் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை வன்னி அரசு உறுதி



திண்டிவனம், ஜூன் 14

சமூக நீதித்துறை அமைச்சர் வன்னி அரசு தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது: திண்டிவனம் சட்டமன்ற தொகுதி, மரக்காணம் ஊராட்சி ஒன்றியம் அன்னம்புத்தூர் ஊராட்சியில் இன்று மக்கள் குறைகேட்கும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் சார் ஆட்சியர், உள்ளாட்சி தலைவர்கள், துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

நூற்றுக்கணக்கான பொது மக்கள் திரளாக பங்கேற்று, தங்கள் கோரிக்கை மனுக்களை வழங்கினர். அவை துறை வாரியாக பிரிக்கப்பட்டு அதிகாரிகளிடம் சேர்க்கப்பட்டது. 'தேர்தல் வாக்குறுதிப்படி, இதுவரை செயல்படாமல் இருந்த சட்டமன்ற அலுவலகத்தை திறந்து, அங்கு மக்கள் தங்கள் குறைகளை முறையிடும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் ஓட்டு கேட்டு நேரில் தான் வந்தோம், இப்போது உங்கள் குறைகளை கேட்கவும் நேரில் தான் வந்துள்ளோம். அனைத்து மனுக்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

# ஈரோடு மாவட்ட மதிமுக செயல் வீரர்கள் கூட்டம்




ஈரோடு ஜூன் 14

ஒருங்கிணைந்த ஈரோடு மாவட்ட மதிமுக செயல் வீரர்கள் கூட்டம் ஈரோட்டில் உள்ள மாவட்ட கட்சி அலுவலகத்தில் நடந்தது. ஈரோடு மாநகர் மாவட்ட செயலாளர் முருகன் தலைமையில் நடந்த இந்த கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட பொறுப்பாளர் செந்தில்நாதன் மேற்கு மாவட்ட செயலாளர் சேது பாஸ்கர் கிழக்கு மாவட்ட செயலாளர் வீரக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாநில அவைத்தலைவர் ஆடிட்டர் அர்ச்சுனராஜ் பொருளாளர் செந்திலதிபன் கொள்கை விளக்க அணி செயலாளர் வந்திய தேவன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

இதில் தொண்டர் அணி மாநில துணை செயலாளர் முசிறி ரவி, ஈரோடு மாநகராட்சி கவுன்சிலர் வனிதா மணி, கோட்டை பகுதி செயலாளர் ஜெயக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில், தொழிலாளர் நலத்துறை சார்பாக, குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தினை முன்னிட்டு, விழிப்புணர்வு பேரணி மற்றும் கையெழுத்து இயக்கத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் துவக்கி வைத்து, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார். உடன், துணை ஆட்சியர் பயிற்சி .சாய் சைதன்யா ஜாதவ் தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர்கள் .ராஜசேகரன் அமலாக்கம் .மாதேஸ்வரன் சமூக பாதுகாப்பு திட்டம் .தாசரதி சமரசம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# "திக, திமுக என்றைக்கும் இணைந்தே இருக்கும்".. முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு



சேலம், ஜூன் 14

"திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் என்றைக்கும் இணைந்தே செயல்படும்" என முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார். சேலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், "ஒரு சிலர் வருவார்கள், போவார்கள். ஆனால் நிரந்தரமாக இருப்பது திமுகவும், திராவிடர் கழகமும்தான். திமுகவை அழித்தே தீருவோம் என்று கூறியவர்களைக்கூட வரவேற்கும் மனப்பான்மை கொண்டவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். தவறாக விமர்சித்து பேசுபவர்களைக்கூட வாழ வைக்கும் இயக்கம் திமுக" என்று கூறினார்.

# திருப்பூர் பார்க் ரோட்டில் டாடா தனிஷ்க் ஷோரூமின் கிளை விரிவாக்கம்



திருப்பூர், ஜூன்.14

திருப்பூர் பார்க் ரோட்டில் உள்ள டாடா தனிஷ்க் ஷோரூம், 5 ஆயிரம் சதுர அடி பரப்பில் நவீன டிசைன் நகைகளுடன் விரிவாக்கம் செய்யப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டது. புதிய ஷோரூமை டைட்டன் நகைப்பிரிவு பிராந்திய மேலாளர் சுபிஷ் சுதாகரன், பிசினஸ் மேலாளர் சந்திரசேகர் ஆகியோர் திறந்து வைத்தனர். ஷோரூம் நிர்வாக இயக்குனர் செல்வக்குமார் வரவேற்றார். அவரது குடும்பத்தினர் பிரமீளா, பூவாத்தாள் மற்றும் வாடிக்கையாளர்கள் குத்துவிளக்கேற்றினர். நிர்வாக இயக்குனர் செல்வக்குமார் கூறுகையில், இன்று(14ம்தேதி)வரைவைரத்தின் மதிப்பு மற்றும் தங்க நகையின் செய்கூலியில் 20 சதவீதம் தள்ளுபடியும், தங்கத்திற்கு கிராமுக்கு 101 ரூபாய் சிறப்பு தள்ளுபடியும் வழங்கப்படும். பழைய நகைகளை மாற்றும் வசதியும், சேமிப்பு திட்டமும் உள்ளது என்றார். அதிகாரிகள் சுபிஷ் சுதாகரன், சந்திரசேகரன் ஆகியோர் கூறுகையில், பாரம்பரியம் மற்றும் நவீன டிசைன்கள் மூலம் வாடிக்கையாளர்களுடனான உறவை வலுவாக்கவே இந்த உலகத்தளவிலான மறு துவக்கம் செய்யப்பட்டுள்ளது என்றனர்.

## மணப்பாறை

# குடும்பத்தினர் கண்டித்ததால் குடி போதை நபர் தற்கொலை



திருச்சி, ஜூன் 14

மணப்பாறை அருகே வையம்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட குளத்தூரம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மோசஸ் (வயது குறிப்பிடப்படவில்லை) என்பவர் குடிபோதைக்கு அடிமையானதால் குடும்பத்தினர் கண்டித்துள்ளனர். இதனால் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக, இன்று காலை வீட்டில் அருகே உள்ள வேப்ப மரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. வையம்பட்டி போலீசார் அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இந்திய கிரிக்கெட் அணியில் திருச்சி வீரர் தேர்வு



திருச்சி, ஜூன் 14


இந்திய இலங்கை அணிகளுக்கு இடையேயான 19 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட் போட்டிக்கான வீரர்கள் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் திருச்சியைச் சேர்ந்த ஹேம் சுதேசன் தேர்வாகியுள்ளார். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, அவருக்கு பொதுமக்களும்கிரிக்கெட் சார்ந்த முன்னோடிகளும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். ஹேம்சுதேசனின் இந்தத் தேர்வு உள்ளூர் கிரிக்கெட் வட்டாரத்தில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# லால்குடி அருகே வாலிபருக்கு சரமாரி அரிவாள் வெட்டு

திருச்சி, ஜூன் 14

திருச்சி காட்டூர் கொத்தமங்கலத்தைச் சேர்ந்த தாமோதரன்,அப்பகுதியில்உள்ளதண்ணீர்தொட்டியில் குளித்துக் கொண்டிருந்தபோது, அதே பகுதியைச் சேர்ந்த சந்தோஷ் என்பவர், கஞ்சா விற்பனை குறித்து போலீஸிடம்கூறியது ஏன்என்று கேட்டு,தாமோதரனை கழுத்தில் சரமாரியாக வெட்டியதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக அளிக்கப்பட்ட புகாரின் பேரில், லால்குடி போலீஸார் சந்தோஷைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# தஞ்சாவூர் பெரிய கோயில் கோட்டை சுவரை சுற்றி மின் விளக்குகள்

## கலெக்டர் தொடங்கி வைத்தார்

தஞ்சாவூர் ஜூன் 14

தஞ்சாவூர் பெரிய கோயில் கோட்டைச்சுவரை சுற்றி புதிதாக அமைக்கப்பட்ட நிரந்தர மின் விளக்குக்கு அமைப்புகளை மாவட்ட கலெக்டர் ரேவதி தொடங்கி வைத்தார் தஞ்சாவூர் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பெரிய கோயில் முன்புறம் உள்ள அகழி துவார் வாரப்பட்டு தற்போது மின் விளக்குகள் அமைக் கப்பட்டன. இந்த மின்னொழியில் கோட்டை சுவர் பொழிவாக இருந்த தற்கு பொதுமக்கள், சுற்றுலா பயணிகளிடையே வரவேற்பு கிடைத்துள்ளது . இதைத்தொடர்ந்து இப்பகுதியில் அழகை மெருகேற்றும் வகையில் ரூபாய் 5 லட்சம் மதிப்பில் நிரந்தர மான மின் விளக்குகள் பொருத்தப் பட்டுள்ளன. இவற்றை தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் ரேவதி அதிகாரப் பூர்வமாக தொடங்கி வைத்தார் நிகழ்ச்சியில் கோட்டாட்சியர் நித்யா,அரண்மனை தேவஸ்தான உதவி ஆணையர் கார்த்திகேயன், தஞ்சாவூர் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் மனோகர், வட்டாட்சியர் சிவக்குமார், சுற்றுலா அலுவலர் வரதராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு அருகே

# வேனில் பூண்டு மூட்டைக்குள் பதுக்கி கடத்திய 440 கிலோ புகையிலை பொருள்கள் பறிமுதல்

ஈரோடு, ஜூன் 14

அந்தியூரை அடுத்த பர்கூர் சோதனைச் சாவடியில் போலீஸார் வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது கர்நாடக மாநிலத்தில் இருந்து வேகமாக வந்த வேனை நிறுத்தி சோதனையிட்டனர். அப்போது அந்த வேனில் பூண்டு மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. இந்த பூண்டு மூட்டைகளை இறக்கி போலீஸார் சோதனையிட்ட போது பூண்டு மூட்டைகளுக்கு அடியில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. இதையடுத்து வாகனத்தை ஓட்டி வந்த கோவை போத்தனூர் பஜனை கோயில் வீதியைச் சேர்ந்த அப்துல் ரகீம் மகன் நௌகத் (35), குனியமுத்தூரைச் சேர்ந்த அபு சலீம் மகன் முபாரக் அலி (47) ஆகியோரிடம் விசாரிக்கையில், கர்நாடக மாநிலம் மைசூரிலிருந்து கோவைக்கு விற்பனை செய்ய இந்த புகையிலை பொருட்களை கடத்தி செல்வது தெரியவந்தது. இதனால் சரக்கு வாகனத்தையும், 70 மூட்டைகளில் இருந்த 440 கிலோ புகையிலைப் பொருள்களையும் பறிமுதல் செய்த போலீஸார் இருவரையும் கைது செய்தனர்.



## கேரளாவில் நிபா வைரஸ் தொற்று

# களியக்காவிளை சோதனை சாவடியில் சுகாதார துறை கண்காணிப்பு தீவிரம்

களியக்காவிளை, ஜூன், 14

கேரளாவில் கோழிக்கோடு மாவட்டத்தில் 43 வயது நபர் ஒருவருக்கு நிபா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் கன்னியாகுமரி மாவட்ட எல்லை களியக்காவிளை சோதனை சாவடியில் சுகாதார துறை சோதனை மற்றும் கண்காணிப்பு தீவிரப் படுத்தப்பட்டுள்ளது.

கோழிக்கோடு மாவட்டத்தில் உள்ள பாதிக்கப்பட்ட நபர் தற்போது கோழிக்கோடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், தீவிர சிகிச்சைப் பிரிவில் வென்டிலேட்டர் உதவியுடன் சிகிச்சை பெற்று வருகிறார். வௌவால்கள் அதிகம் இருந்த ஒரு கட்டிடத்தின் கிடங்கை சுத்தம் செய்தபோது அவருக்கு இந்தத் தொற்று ஏற்பட்டதாக முதற்கட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது

இந்நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கேரளாவில் இருந்து வாகனங்களில் வரும் பயணிகளை தமிழக எல்லை பகுதிகளில் சோதனை மற்றும் கண்காணித்த பிறகு தமிழகத்திற்குள் அனுமதிக்க சுகாதார துறை உத்தரவிடப்பட்ட நிலையில், கேரளாவில் இருந்து வ குமரி மாவட்டம் வரும் வாகனங்களை எல்லையில் உள்ள களியக்காவிளை சோதனை சாவடியில் தடுத்து நிறுத்தி பயணிகளுக்கு காய்ச்சல் போன்ற அறிகுறிகள் உள்ளதா என சோதனை மேற்கொண்ட பிறகு தமிழகத்திற்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.

அறிகுறிகள் இருந்தால் அவர்களின் மொபைல் எண் மற்றும் முகவரிகளை பதிவு செய்து சிகிட்சை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார துறை அதிகாரி மாவட்ட சுகாதார அலுவலர் நமச்சிவாயம் தெரிவித்துள்ளார்.

கேரளாவில் இருந்து குமரி மாவட்டம் வழியாக தமிழகத்திற்குள் நுழைய பத்திற்கும் மேற்பட்ட வழித்தடங்கள்உள்ள நிலையில் களியக்காவிளை பகுதியில் ஒரு பகுதியில் மட்டுமே இந்த சோதனை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.




# உலக குருதி கொடையாளர் தினத்தை சிறப்பித்த மை தருமபுரி அமைப்பினர் மற்றும் செந்தில் பப்ளிக் பள்ளி நிறுவனம்

தருமபுரி ஜூன் 14

தருமபுரியில் ஜூன் 14 உலக இரத்தக் கொடையாளர்கள்தினத்தை முன்னிட்டு மை தருமபுரி அமைப்பின் சார்பாக அதியமான் கோட்டை செந்தில் பப்ளிக் பள்ளி வளாகத்தில் மாணவர்களிடையே ரத்ததான பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மாணவர்களை இரத்தத்துளி வடிவில் அமர வைத்து சிவப்பு நிற பலூன்களை பறக்க விட்டு, மனிதநேயத்தின் ஒரு துளி இரத்ததானம் தாருங்கள் உயிரைக் காப்பாற்றுங்கள் என்ற நோக்கம் அடையாளமாக திகழ்ந்தது. அடுத்து வரும் சமுதாயத்திற்கு இரத்ததானம் பற்றிய விழிப்புணர்வு மாணவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டது. பள்ளியில் மாருதி இரத்த வங்கி சார்பாக இரத்ததானம் முகாம் நடைபெற்றது. இதில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் திரளாக கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பள்ளியின் நிறுவனர் செந்தில் சி. கந்தசாமி, செயலாளர் தனசேகர், நிர்வாக இயக்குனர் கார்த்திகேயன், முதன்மை முதல்வர் சீனிவாசன், முதல்வர் செந்தில் முருகன், தங்கம் மருத்துவமனை மருத்துவர் வானதி செந்தில், குழந்தைகள் நல மருத்துவர் தீபக், மாருதி இரத்த வங்கி வெங்கடாசலம், விஜய் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவர்கள் கலந்து கொண்டனர். பள்ளி ஆசிரியர்கள் விஜய் வித்யா, ஷோபா, பரமேஸ்வரன், மை தருமபுரி அமைப்பின் நிறுவனத் தலைவர் சதீஸ் குமார் ராஜா, அமைப்பாளர்கள் சண்முகம், கணேஷ், விஜயகாந்த், ராஜ்குமார், ரோடா ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர்.

## தஞ்சாவூர் மாவட்டவேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையத்தில்

# மத்திய அரசு பணியாளர் தேர்வாணைத்தில் பணியிடங்களுக்கு போட்டி தேர்வுகளுக்கு இலவச பயிற்சி




தஞ்சாவூர் ஜூன் 14

தஞ்சாவூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையத்தில் இயங்கி வரும் தன்னார்வ பயிலும் வட்டம் மூலம் மத்திய அரசு பணியாளர் தேர்வா ணையத்தின் தேர்வுகளுக்கு ஜூன் 19ஆம் தேதி முதல் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளன

இது குறித்து மாவட்ட கலெக்டர் ரேவதி தெரிவித்திருப்பதாவது மத்திய அரசின் பணியாளர் தேர்வாணையத்தின் சார்பில் நடத்தப்படும், ஒருங்கிணைந்த பட்டதாரிகள் நிலையில் (எஸ் எஸ் சி , சி ஜி எல்)உள்ள 12,256 பணியிடங்களுக்கான போட்டித் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க கடைசி தேதி ஜூன் 22 ஆம் தேதி இதற்கான இணையதள முகவரி https://ssc.gov.in இதே போல் ரயில்வே தேர்வாணையத்தின் சார்பில் காலியாக உள்ள 11,120 லோகோ உதவி ஓட்டுநர் பணி யிடங்களுக்கு விண்ணப்பிக்கவேண்டியகடைசி தேதி ஜூன் 16ஆம் தேதி இதற்கான இணைய தள முகவரி https://rrbchennai.gov.in இத்தேர்வு களுக்குதயாராகி வரும் போட்டி தேர்வர்கள் பயன் பெறும் வகையில் கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் தஞ்சாவூர் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையத்தில் ஜூன் 19ஆம் தேதி தொடங்கப்பட உள்ளது. இப்பயிற்சி வகுப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10:30 மணி முதல் பிற்பகல் 01.30 மணி வரை நடைபெற உள்ளது

இப் பயிற்சிவகுப்பில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் இரண்டு பாஸ்போர்ட் அளவு புகைப் படங்கள், ஆதார் அட்டை நகலுடன் தஞ்சாவூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் நேரில் அணுகலாம்

மேலும் விவரங்களுக்கு 04362 237037என்ற தொலைபேசி எண்ணி ல் தொடர்பு கொள்ளலாம்.

## ரெய்கி இண்டர்நேசனல் சார்பாக

# அற்புதம் செய்யும் அதிசய பொருட்கள் கண்காட்சி மற்றும் விற்பனை




கோவை ஜூன்:14

கோவை காந்திபுரம் பகுதியில் உள்ள தனியார் ஹோட்டலில் ரெய்கி அற்புதம் செய்யும் அதிசய பொருட்கள் கண்காட்சி விற்பனை மற்றும் ரெய்கி மீட்டிங் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை இரண்டு நாட்கள் ரெய்கி இன்டர்நேஷனல் கிராண்ட் மாஸ்டர் டாக்டர். மீனாட்சி தலைமையில் நடைபெற்று வருகிறது. பின்னர் ரெய்கி தலைவர் செய்தியாளர்களிடம் கூறுகையில் நாங்கள் பல வருட காலமாக ரெய்கி பயிற்சி மற்றும் அற்புதம் செய்யும் அதிசய கண்காட்சி மற்றும் விற்பனை செய்து வருகிறோம் உள்ளூர் மட்டும் இல்லாமல் வெளிநாடுகளிலும் பயிற்சி சிறப்பாக செய்து வருகிறோம்.

அதனை தொடர்ந்து கோவையில் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுகிழமை இரண்டு நாட்கள் அற்புதம் செய்யும் அதிசயப் பொருட்கள் கண்காட்சி மற்றும் விற்பனை நடைபெற்று வருகிறது. இதில் பெரியவர்கள் சிறியவர்கள் என அனைவரும் கலந்து கொண்டு நல்லபடியாக அவர்களது எண்ணங்கள் நிறைவேற்றி கொள்ளுங்கள் அதேபோல் இதில் ஸவுண்ட் தெரபி என்ற அதிநவீன பயிற்சி உள்ளது இது அதே போல் தேவையற்ற எண்ணங்களை நீக்கி நம்முடைய உடம்பிலும், மனதிலும் பாசிட்டிவான எண்ணங்களை செயல்படுத்தும் இதில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என அனைவரும் இப்பயிற்சியில் பயனடையுமாறு கேட்டுக்கொண்டார். இந்த ஸவுண்ட் தெரபி வெற்றியே நாம் நினைக்கும் அனைத்து நல்லா செயல்களும் நிறைவேறும் என்பதே இதனுடைய சிறப்பம்சமாக இருப்பதால் இதனை அனைவரும் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

இந்த ஒரு நல்ல செயலை செய்ய எனக்கு உறுதுணையாக இருந்த என்னுடைய குருமார்களுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன் என்றார். இதில் ரெய்கி மேலாளர் கணேஷ்பாபு, ராஜேஷ், உஷா ராணி, அருண், விஜயலட்சுமி மற்றும் பலர் உடனிருந்தனர்.



# மாறாமலை கிராம்பு எஸ்டேட் தொழிலாளியை தந்தத்தால் குத்திய ஒற்றை யானை

நாகர்கோவில், ஜூன். 14

குமரி மாவட்ட வனப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக காட்டு யானைகளின் நடமாட்டம் கணிசமாக அதிகரித்து உள்ளது. அடர்ந்த வனப் பகுதியை ஒட்டி அமைந்துள்ள கிராமங்கள் மற்றும் பழங்குடியின மக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதியில் தொடர்ந்து அச்சுறுத்தி வருகின்றன.

கடந்த வாரம் மருதம்பாறை, வட்டப்பாறை. கடையாலுமூடு ஆகிய பகுதிகளில் மூன்று காட்டு யானைகள் கூட்டமாக சுற்றி திரிந்தன. அப்போது கடையாலுமூடு பகுதியை சேர்ந்த மத போதகரமான ராகேஷ் என்பரை யானை தந்தத்தால் குத்தியதில் அவர் பரிகாரமாக உயிரிழந்தார்.

இந்த சோகம் மறைவதற்குள் நேற்று முன்தினம் களியல் பகுதியில் புகுந்த காட்டுயானைகள் அங்கிருந்த தென்னை, வாழை மரங்களை சேதப்படுத்தியது. இந்த சூழ்நிலையில் நேற்று காலை மாறாமலை வனப்பகுதியில் மீண்டும் ஒரு ஒற்றை யானை ஒருவரை தாக்கியுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த ரவி (45) என்பவர் மாறாமலை பகுதிகளில் ஒரு தனியார் கிராம்பு எஸ்டேட்டில் தங்கி கூலி தொழிலாளியாக உள்ளார். நேற்று காலை சுமார் 5 மணி அளவில் வழக்கம் போல் தனது வீட்டை விட்டு வெளியே வந்த போது, இருட்டில் பகுதியில் நின்ற ஒரு ஒற்றை யானை தந்ததால் வயிற்றுப் பகுதியில் குத்தி ரவியை தூக்கி வீசியது.

யானையின் தாக்குதலுக்குள்ளான ரவியின் கூச்சலை கேட்டு அக்கம் பக்கத்தில் இருந்த சகத் தொழிலாளர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து, யானையை விரட்டும் முயற்சியில் ஈடுபட்டனர். பொதுமக்களின் எதிர்ப்பால் யானை சற்று பின்வாங்கி வனப்பகுதிகள் சென்றது.

யானை சென்றதும் ரத்த வெள்ளத்தில் போராடிக் கொண்டிருந்த ரெவியை பொதுமக்கள் உடனடியாக மீட்டு அவரை குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை கொண்டு சென்றனர். அங்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். இது குறித்து மாவட்ட வனத்துறை அதிகாரிகளுக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டது. வனத்துறையினர் சம்பவத்திற்கு விரைந்து சென்று நேரில் பார்வையிட்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பூந்தமல்லி அருகே 2 பைக் மோதி கோர விபத்து

சென்னை, ஜூன் 14

நெற்குன்றம், மேட்டுக்குப்பைதச் சேர்ந்தவர் சீனிவாசன் (வயது 46) கொத்தனார். இவரின் மகன் புஷ்பராஜ் (வயது 19) அருகம்பாக்கத்தில் உள்ள அண்ணாமலை கல்வி நிறுவனத்தில் ஹோட்டல் மேலாண்மை 2ஆம் ஆண்டு பயின்று வந்தார். கடந்த 11ந்தேதி இரவு 11 மணியளவில் புஷ்பராஜ் தனது பைக்கில் தலைக்கவசம் அணியாமல், 2 பேரை பின்னால் அமரவைத்து, அமைந்தகரை நோக்கி ஓட்டிச் சென்றார்.

இவருக்கு பின்னால் பாடியைச் சேர்ந்த ஒரு தனியார் நிறுவனத்தின் மேலாளராகவும், பகுதி நேர ரேபிட்டோ ஓட்டுநராகவும் பணிபுரியும் , குற்றம் சாட்டப்பட்ட ஓட்டுநர், முத்து மணிகண்டன் (வயது27) பைக் ஓட்டிச் சென்றார்.

அப்போது கோயம்பேடில் உள்ள ரோகிணி தியேட்டருக்கு அருகே, பூந்தமல்லி தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்தபோது முத்து மாணிக்கம் பைக்கின் கட்டுப்பாட்டை இழந்து முன்னாடி சென்று கொண்டிருந்த புஷ்பராஜின் பைக்கில் பயஙகரமாக மோதினார்.

புஷ்பராஜ் பைக்கிலிருந்து தூக்கி வீசப்பட்டார். இதனால் தலையிலும் முகத்திலும் பலத்த காயங்கள் ஏற்பட்டன. புஷ்பராஜுடன் பின்னால் அமர்ந்து பயணித்த 2 சிறுவர்களும் தலைக்கவசம் அணியவில்லை.

ஆனாலும் அவர்களுக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. மேலும் புஷ்பராஜின் பைக்கில் மோதிய முத்து மணிகண்டனுக்கும் இடது கையில் சிறிய சிராய்ப்புகளே ஏற்பட்டன. இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த கோயம்பேடு போக்குவரத்து புலனாய்வு காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.

இதனைத்தொடர்ந்து உடனடியாக படுகாயமடைந்த புஷ்பராஜை மட்டும் மீட்டு கேஎம்சி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

ஆனால் நேற்று அதிகாலை 1 மணிக்கு சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். புஷ்பராஜின் இழப்பு அவரது குடும்பத்தினரிடையே பெரும் துயரத்தை ஏற்படுத்தியது.

கோயம்பேடு போலீசார் இந்த சம்பவம் குறித்து முதன்மை குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



## குமரி மாவட்டத்திற்குட்பட்ட

# சுற்றுலா தலங்களில் ஆய்வு கலெக்டர், அமைச்சர் மேற்கொண்டனர்

நாகர்கோவில், ஜூன்.14

கன்னியாகுமரி மாவட்ட சுற்றுலாத்துறை, நீர்வளத்துறை, ஊரக வளர்ச்சி முகமை, பேரூராட்சிகள் துறை உள்ளிட்ட துறைகளின் சார்பில், மாவட்டத்திற்குட்பட்ட சுற்றுலா தலங்களில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்ட பணிகளை ஆய்வு செய்யும் பணி நேற்று நடைபெற்றது. மாவட்ட ஆட்சி தலைவர்பிரதாப்தலைமையில்சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ் குமார் பார்வையிட்டார்.

அருவிக்கரை ஆற்றின் குறுக்கே கம்பிவடம் ஊர்தி (ரோப் கார்) அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை தொழில்நுட்ப வல்லுநர்களை கொண்டு ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மாத்தூர் தொட்டிபாலம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதோடு, தொட்டிபாலத்தின் கீழ் பகுதியில் உள்ள சிறுவர் பூங்காவினை மேம்படுத்தவும், சுற்றுலா பயணிகளுக்கு கழிப்பறை வசதி, சுத்தமான குடிநீர் உள்ளிட்ட அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் திற்பரப்பு பேரூராட்சிக்குட்பட்ட திற்பரப்பு அருவியின் கரையோரம் ரூ.4.30 கோடி மதிப்பில் பல்நோக்கு வளாகம், பெண்கள் உடை மாற்றும் அறை மற்றும் பூங்கா மேம்பாடு உள்ளிட்ட பணிகளை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் சிற்றார் அணை பகுதியில் ரூ.3.40 கோடி மதிப்பில் படகுதளம், படகு போக்குவரத்து, உணவகம், வாகனங்கள் நிறுத்திமிடம், ஓய்வு கூடாரம் அமைக்கும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இரட்டை அருவியில் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு வசதி ஏற்படுத்தி பயணிகளின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டுமென சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்களுக்கும் ஒப்பந்ததாரருக்கும் அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து அமைச்சர் நிருபர்களிடம் கூறியதாவது:

அண்டை மாநிலமான கேரளாவில் சுற்றுலாத்துறைக்கு அதிக நிதியும், அதன் மூலம் அதிக வருவாயும் கிடைக்கிறது. அதேபோன்று நமது கன்னியாகுமரி மாவட்டத்திலும் சுற்றுலாப் பயணிகளின் வசதிகளை மேம்படுத்துவதற்கான பணிகள் தீவிரமாக முடுக்கிவிடப்ப ட்டுள்ளது. தற்போது மாத்தூர் தொட்டிப்பாலத்தில் மட்டும் ரூ.3.25 கோடி மதிப்பில் மேம்பாட்டுப்பணிகள் நடைபெற்று வருகின்றது. ஊரக உள்ளாட்சி மற்றும் பேரூராட்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து, அடுத்த பட்ஜெட்டில் கூடுதல் திட்டங்கள் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நீர் வள ஆதாரத்துறையின் கீழ் வரும் பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் முறையாக அடையாளம் காணப்பட்டு அங்குள்ள மக்களுக்கு முன்னரே உரிய அறிவிப்பு வழங்கப்பட்டு, சட்டப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பெருந்தலைவர் காமராசர் காலத்தில் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாத்தூர் தொட்டிப்பாலம் கட்டப்பட்டது. நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோதே இங்கு காமராஜரின் திருவுருவச் சிலை அமைக்க வேண்டும் எனப் பலமுறை சட்டமன்றத்தில் கோரிக்கை விடுத்து ள்ளேன். தற்போது சுற்றுலாத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளதால், மாண்பு மிகுதமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சரை நேரில் சந்தித்து இதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, வரும் காலங்களில் இங்கு நிச்சயம் சிலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், இப்பகுதியில் நில எல்லைகளைத் துல்லியமாக வரையறை செய்வது உள்ளிட்ட பொதுமக்களின் இதர கோரிக்கைகளையும், உள்ளூர் சட்டமன்ற உறுப்பினரின் மூலம் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன். என கூறினார்.

நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.செல்லசுவாமி (பத்மநாபபரம்) ,ற்.றி.பிரவின் (விளவங்கோடு) ஆகியோர் முன்னிலை வகித்தனர். உதவி ஆட்சியர் (பயிற்சி) மோனிகா, மாவட்ட சுற்றுலா அலுவலர் காமராஜ், நீர்வளத்துறை செயற்பொறியாளர் வசந்தி, உதவி செயற்பொறியாளர் ரமேஷ், உதவி பொறியாளர் விஜில் சிங், திருவட்டார் வட்டாட்சியர் மரகதவல்லி, உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், ஒப்பந்ததார்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.




# கோவையின் வணிக வளர்ச்சிக்கு புதிய மைல்கல் 'சான்பிரிக்ஸ் பிசினஸ் சென்டர்' பிரம்மாண்ட அறிமுகம்

கோவை ஜூன்:14

கோவையின் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனங்களில் ஒன்றான சான்பிரிக்ஸ் பிராப்பர்டீஸ் தனது புதிய வணிக மைல்கல்லான சான்பிரிக்ஸ் பிசினஸ் சென்டர் வளாகத்தை கோவையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

கடந்த 2012ம் ஆண்டு தொடங்கப்பட்ட சான்பிரிக்ஸ் பிராப்பர்டீஸ், தரம், நம்பிக்கை மற்றும் சொன்ன நேரத்தில் திட்டங்களை ஒப்படைப்பது ஆகியவற்றை அடிப்படை கொள்கைகளாகக் கொண்டு கடந்த 14 ஆண்டுகளாக வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெற்று வளர்ந்து வரும் நிறுவனமாகும்.

தற்போது கோவையின் முக்கிய வணிக மையமாக வளர்ந்து வரும் நவ இந்தியா பகுதியில், சுமார் 70,000 சதுர அடி பரப்பளவில் அதிநவீன வசதிகளுடன் கூடிய இந்த புதிய வணிக வளாகத்தை நிறுவனம் உருவாக்கியுள்ளது. சர்வதேச விமான நிலையம், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் முக்கிய போக்குவரத்து வசதிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ளதால், இது எதிர்கால வணிக வளர்ச்சிக்கான சிறந்த முகவரியாகக் கருதப்படுகிறது.

இந்த புதிய வணிக மையத்தின் அறிமுகம் மற்றும் நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து சான்பிரிக்ஸ் நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் ஸ்டானி ஜோசப் பேசுகையில், வாக்குறுதி அளிப்பது மட்டுமல்ல, அதைச் துல்லியமாகச் செயல்படுத்திக் காட்டுவதுதான் சான்பிரிக்ஸ் நிறுவனத்தின் தனித்துவமான அடையாளம் ஆகும். இதன் மூலம் தரத்தில் எந்தவித சமரசமும் இல்லாமல் திட்டங்களை எங்களால் வெற்றிகரமாக நிறைவேற்ற முடிகிறது. இதுவரை நாங்கள் மேற்கொண்ட அனைத்து திட்டங்களையும் தரத்திலும், சொன்ன காலக்கெடுவிலும் சிறப்பாக நிறைவேற்றியுள்ளோம்.

தொடர்ந்து நிறுவனத்தின் எதிர்கால இலக்குகள் குறித்துப் பேசிய சான்பிரிக்ஸ் நிறுவனத்தின் முதன்மைச் செயல் அதிகாரி சௌமியா ராஜேஷ், கூறுகையில் வாடிக்கையாளர்கள் எங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கை, எங்களின் தொழில்நுட்ப திறன், உலகத்தரம் வாய்ந்த கட்டுமானம் மற்றும் காலத்திற்கேற்ற ஒப்படைப்பு ஆகியவற்றின் மூலம் கோவையின் உட்கட்டமைப்பு மற்றும் வணிக வளர்ச்சியில் சான்பிரிக்ஸ் தொடர்ந்து முதன்மையாகப் பங்களித்து வருகிறது.

இந்நிகழ்வில் சான்பிரிக்ஸ் நிறுவனத்தின் திட்ட மேலாளர் டேவிட் கிறிஸ்டோபர், அலுவலக மேலாண் இயக்குநர் வைஷ்ணவி திருப்பதி மற்றும் நிறுவனத்தின் முக்கியப் பொறுப்பாளர்கள், ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## நித்திரவிளை அருகே

# ஆற்றில் மூழ்கி வாலிபர் மாயம் 2 ம் நாளாக தேடும் பணி தீவிரம்



மார்த்தாண்டம், ஜூன்.14

நித்திரவிளை அருகே உள்ள ராமவர்மன் புதுத்தெரு பகுதி சேர்ந்தவர் அபி என்கிற உண்ணி ( 22). இவர் சென்னையில் தங்கி வேலை செய்து வந்தார். தற்போது ஊரில் உள்ளார். வெளியூரில் இருந்து சொந்த ஊருக்கு வந்த அபி நேற்று முன்தினம் மதிய வேலையில் அதே பகுதியை சேர்ந்த நண்பர்களுடன் வெளியே சென்றார். பின்னர் நண்பர்கள் விரிவிளை பகுதி வழியாக செல்லும் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கணபதியான் கடவு பாலத்தின் கீழ்பகுதியில் ஆற்றில் இறங்கி குளிக்க முயன்றதாக தெரிகிறது.

தற்போது மாவட்டத்தில் பெய்து வரும் தொடர்மழை காரணமாக ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, தண்ணீர் அதிகமாக பாய்ச்சலுடன் செல்லும் நிலையில் தண்ணீருக்குள் இறங்கிய அபி ஆற்றில் அடித்து செல்லப்பட்டார். இதை பார்த்த நண்பர்கள் கூச்சலிட்டார்கள். பின்னர் அவர்களின் ஒருவர் ஆற்றில் குதித்து அபியை காப்பாற்ற முயன்றும் அவரால் காப்பாற்ற முடியவில்லை. அபி ஆற்று வெள்ளத்தில் மாயமானார்.

தொடர்ந்து கொல்லங்கோடு தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். தீயணைப்புத்துறை வீரர்கள் ஆற்றில் படகு மூலம் மாயமான வாலிபர் அபியை தேடும்பணியில் ஈடுபட்டனர். ஆனால் நீண்ட நேரமாகியும் கிடைக்கவில்லை. பின்னர் இரவு ஆனதால் தேடும் பணி நிறுத்தப்பட்டது.

இதையடுத்து நேற்று 2வது நாளாகவும் அபியின் உடலை தீயணைப்புத் துறையினர் தேடும் பணியில் ஈடுபட்டனர். மேலும் மாயமான வாலிபர் ஆற்றில் இறங்கும்போது மூழ்கி மாயமானாரா? அல்லது வேறு ஏதாவது காரணமா? என்ற கோணத்தில் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## சுசீந்திரத்தில்

# கஞ்சா வைத்திருந்த தூய்மை பணியாளர்கள் உட்பட 3 பேர் கைது



சுசீந்திரம், ஜூன் 14

குமரி மாவட்டத்தில் கஞ்சா மற்றும் குட்கா உள்ளிட்ட போதைப் பொருட்களின் விற்பனையும், புழக்கத்தை யும் முற்றிலும் கட்டுப்படுத்த மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்டாலின் உத்தரவின் பேரில் போலீசார் தீவிர அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இதன் ஒரு பகுதியாக சுசீந்திரம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் தனிஷ் லியோன் தலைமையிலான போலீசார் சுசீந்திரம் பழைய ரெயில்வே ஸ்டேஷன் பகுதியில் தீவிர வாகன தணிக்கை மற்றும் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த 3 வாலிபர்களை போலீசார் சந்தேகத்தின் பேரில் தடுத்து நிறுத்தி அதிரடி சோதனை நடத்தினர். சோதனையின் போது அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக பேசியதால் போலீசார் அவர்கள் வைத்திருந்த உடமைகளை சோதித்தனர். அதில் சட்ட விரோதமாக விற்பனைக்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த 50 கிராம் கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து அவர்களிடம் இருந்த கஞ்சா மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 2 மோட்டார் சைக்கிள்களையும் போலீசார் பறிமுதல் செய்தனர். மேலும் பிடிபட்ட 3 பேரையும் சுசீந்திரம் போலீஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று தீவிர விசாரணை நடத்தினர்.

போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் பிடிபட்டவர்கள் தெங்கம்புதூர் வடக்கு அஞ்சுகுடியிருப்பை சேர்ந்த வினு வயது 29, சண்முகம் வயது 21, பால்குளம் பகுதியை சேர்ந்த முருகன் வயது 37, என்பது தெரிய வந்தது. கைது செய்யப்பட்டவர்களில் வினு மற்றும் முருகன் ஆகிய இருவரும் தூய்மை பணியாளர்களாக வேலை பார்த்து வருபவர்கள் என்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட 3 பேரிடம் கஞ்சா எங்கிருந்து வாங்கப்பட்டது. என்பது குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். இதைத்தொடர்ந்து அவர்களை ஜாமீனில் விடுவித்தனர். அவர்களது வங்கி கணக்குகளை ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள்.

# திருச்சி சிறுமியுடன் உல்லாசம் போக்சோவில் வாலிபர் கைது

திருச்சி, ஜூன் 14

திருச்சி நாகமங்கலம் பகுதியைச் சேர்ந்த 20 வயது தாரை தப்பட்டை இசைக்கலைஞர் பூபதி, 14 வயது சிறுமியை ஆசை வார்த்தை கூறி முள் காட்டிற்கு அழைத்துச்சென்றுபாலியல்ரீதியாகதுன்புறுத்தியதாகக் கூறப்படுகிறது. இது குறித்து சிறுமியின் பெற்றோர் கண்டோன்மெண்ட் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். புகாரின் பேரில், போலீசார் பூபதியை போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# ஒ பை தாமரா உணவத்தில் ரெட்ரோ ஸ்டைல் ரெஸ்டோ பார் துவக்க விழா

கோவை ஜூன்:14

இன்றைய நவீன தலைமுறைகள் விரும்பும்வகையில்,ப்ரத்யேகக்ளோபல் கிச்சன் வசதிகளுடன் கூடிய ரெட்ரோ ஸ்டைல் ரெஸ்டோ பார் துவக்கவிழா நிகழ்ச்சி,கோவை சிங்காநல்லூர் பகுதியில் உள்ள ஒ பை தாமரா உணவத்தில் துவங்கப்பட்டுள்ளது.

உணவு பிரியர்களின் விருப்பங்களை பூர்த்தி செய்யும் வகையில், அதன் சுவை மாறாமல் சோசியல் லைப்ஸ்டைலுக்கு ஏற்ற வகையில் கோவை சிங்காநல்லூர் பகுதியில் உள்ள ஒ பை தாமரா உணவகத்தில்,குளோபல் கிச்சன்,லோக்கல் ஆன்மா என்ற சிந்தனையை முன்நிறுத்தி,புத்தம் புதிய உணவு பட்டியலுடன் கூடிய ரெட்ரோ ஸ்டைலில், ரெட்ரோ பார் துவங்கப்பட்டுள்ளது.

கடந்த கால நினைவுகளை கொண்டு வரும் நோக்கத்தில்,ஹை டைவ் மக்களை ஒருங்கிணைக்கும் வகையில் ரம்மியமான இசை,கலாச்சாரம்,சமூக உணர்வை வெளிப்படுத்தும் ஒரு மது வடிவமைப்பை இத்தகைய பார் கொண்டுள்ளது.கூடுதல் சிறப்பம்சங்களாக,உலகலாவிய சமையல்,உள்ளூர் ஆன்மா என்ற நோக்கில்,உணவு பட்டியல் இங்கு தயாரிக்க பட்டுள்ளது.மேல்தட்டு,மற்றும் நடுத்தர வர்க்கத்தினரின்வார இறுதி நாட்கள் கொண்டாட ங்களை நடத்த ஏது வான ஒரு அமைப்பை இத்தகைய ரெட்ரோ பார் கொண்டுள்ளது.சர்வதேச அளவில் விரும்பி உண்ணும் உணவு கள்,தமிழக மக்களுக்கு பரிச்சயமான உணவுகள்,இங்குஅனைவராலும்விரும்பும் ஒரு மகத்துவத்தை பெற்றுள்ளது.

குறிப்பாக கறிவேப்பிலை பட்டர் கார்லிக் பிரான்ஸ்,செட்டிநாடு ஸ்பைஸ்டு லோட்டஸ் ஸ்டெம்ஸ், குறு மிளகு கோழி பீட்சா,மற்றும் ஆச்சி மீன் குழம்பு பவுல்,ஆகியவை தனித்துவமிக்க சமையல் கலைஞர்களின் கை வண்ணத்தில் தயாராகி வருகின்றது.

இவைஉணவுக்காகவாருங்கள்,பானங்களுக்காக தங்குங்கள்,இவை இரண்டுக் காகவும் மீண்டும் வாருங்கள் என்ற சமையலறை தத்துவத்தை ஏற்படுத்தி உள்ளது.

மேலும் இந்த ரெட்ரோ பார் குறித்து ஒ பை தாமரா உணவகத்தின் பொது மேளாளர் உமாபதி அமிர்தம் கூறியதாவது, விருந்தோம்பல் அனுபவங்கள் பெரும் பாலும் நம் மனதில் நீண்ட கால நினைவுகளை நமக்குள் ஏற்படுத்திவிடும்,அத்தகைய விருந்தோம்பலை ஹை டைவ் வழங்குகின்றது.மாறிவரும் லைப் ஸ்டைலுக்கு ஏற்ற வகையில்,மாலை பொழுதை மயக்கும் உணவுகள்,காக்டெய்ல்கள்,இங்கு உங்களை மீண்டும் மீண்டும் வர தூண்டும் என்றார்.

கூடுதலாக ரெட்ரோ நைட்ஸ் என்ற தொடர் இசை நிகழ்ச்சிகளும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும்,இங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இசை,பாடல்கள்,இசை நிகழ்ச்சிகள் உங்களை மெய் மறக்க செய்யும் நிகழ்வாக அமையும் என்று நம்புவதாக தெரிவித்தார். காலை 11மணி முதல் இரவு 11மணி வரை,செயல்படும் ஹை டைவ் உங்களை அடுத்த கட்ட நிலைக்கு கொண்டு செல்லும் என்பதில் ஐயமில்லை என்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மாநகராட்சி, சந்திரசூடேஸ்வரர் மலைக்கோயில் வளாகத்தில், ரூ.10 இலட்சம் மதிப்பில் மறு சீரமைக்கப்பட்ட டெலஸ்கோப் ஹவுஸ் மற்றும் குழந்தைகள் பூங்காவை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் திறந்து வைத்தார். உடன் ஓசூர் சார் ஆட்சியர் .ஆக்ரிதி சேத்தி துணை ஆட்சியர் பயிற்சி .சாய் சைதன்யா ஜாதவ் துணை மேயர் .ஆனந்தையா, கிரெடாய் சங்க தலைவர் .குருநாதன், செயலாளர் .வெங்டாசலம், சமூக ஆர்வலர் .லட்சுமணன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# நீர்வளத் துறைக்கு சொந்தமான குளத்தின் கரையை உடைத்த கும்பல்

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

நாகர்கோவில், ஜூன்.14

விளவங்கோடு வட்டம் நல்லூர் கிராமத்திற்கு உட்பட்ட சிராயன்குழி பகுதியில்நீர்வளத்துறைக்கு சொந்தமான பம்மக்குளம் என்ற குளம் உள்ளது. இந்த குளத்தில் பேச்சிப்பாறை அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் பட்டணங்கால் கால்வாய் மூலம் தண்ணீர் பெறப்பட்டு பாசனத்திற்காக அப்பகுதி விவசாய நிலங்களுக்கு பயன்பட்டு வருகிறது.



மேலும் கடுமையான வறட்சி காலங்களில் கூட குளத்தில் தண்ணீர் வற்றாமல் உள்ள நிலையில் அப்பகுதி மக்களின் அன்றாட தேவைகளுக்கும் கால்நடைகளுக்கும் அந்தக் குளத்தின்தண்ணீர் பயன்பட்டு வந்தது. அந்தக் குளத்தின் தண்ணீரை குளிப்பதற்காக அப்பகுதி மக்களும் பயன்படுத்தி வந்தனர்.

இந்நிலையில் நீர்வளத் துறைக்கு சொந்தமான மேற்படி குளத்தில் சுமார் 30 அடி அகலத்தில் 50 அடி உயரமுள்ள கரை பகுதியை ஜேசிபி உட்பட கனரக எந்திரங்கள் மூலம் முழுமையாக கரையை உடைத்து சேதப்படுத்தி தண்ணீரை முழுவதும் வெளியேற்றி உள்ளனர். இதனால் குளத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்த தண்ணீர் முழுவதும் வெளியேற்றப்பட்ட நிலையில் அப்பகுதியில் வாழை விவசாயத்திற்கு கூட தண்ணீர் இல்லாமல் விவசாய நிலங்கள் வறண்டு போகும் நிலையை ஏற்படுத்தி உள்ளனர்.

ஆகவே நீர்வளத் துறைக்கு சொந்தமான மேற்படி பம்மகுளத்தின் கரை பகுதியை முழுவதுமாக உடைத்து சேதப்படுத்தி தண்ணீரை வெளியேற்றி அரசுக்கு பல லட்சங்கள் இழப்பு ஏற்படுத்திய சட்டவிரோத கும்பல்கள் மீது நடவடிக்கை எடுத்துசேதப்பகுதிக்கானஇழப்பீட்டை ஈடுகட்ட வேண்டும் என்பதோடு குளத்தின் கரையை உடனடியாக சீரமைத்து அப்பகுதி விவசாய நிலங்களை பாதுகாக்க உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# முடிவடைகிறது மீன்பிடி தடைக்காலம்.. விசைப்படகுகள் சோதனை ஓட்டம்



தூத்துக்குடி, ஜூன் 14

மீன்களின் இனப்பெருக்க காலத்தையொட்டி தமிழகத்தின் கிழக்கு கடற் கரை பகுதிகளில் கடந்த ஏப்ரல் 15ந் தேதி முதல் மீன்பிடித் தடைக்கா லம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த காலத்தில் விசைப்படகுகள் மற்றும் இழுவைப்படகுகள் கடலில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.தூத்துக்குடி மீன்பிடிதுறைமுகம், வேம்பார், தருவைகுளம் போன்ற இடங்களில் உள்ள 545க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடலுக்கு செல்லாமல் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளன.

இந்த மீன்பிடி தடைக்காலத்தில் தூத்துக்குடி கடல் பகுதியில் கேரளம் விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்கிறார்களா? என்பதை கண்காணிக்க மீன்வளத்துறையினர்,மீனவர்கள்,போலீசார்,கடலோர காவல்படையினர் அடங்கிய குழு அமைக்கப்பட்டு கூட்டு ரோந்து மேற்கொள்ளப்பட்டது.

மீன்பிடி தடைக்காலத்தில் மீனவர்கள் தங்கள் படகுகளை மராமத்து செய்தல், வலைகளை சரி செய்தல், புதிய வலைகளை பின்னுதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வந்தனர்.

தடைக்காலம் நாளை (ஞாயிற்றுக்கிழமை) முடிவடைவதால் தூத்துக்குடியில் இருந்து 250க்கும் மேற்பட்ட விசைப்படகு மீனவர்களும், தருவைகுளம், வேம்பார் போன்ற பகுதிகளில் உள்ள விசைப்படகு மீனவர்களும் 61 நாட்களுக்கு பிறகு கடலுக்கு செல்ல தயாராகி வருகின்றனர்.

நேற்று முதல் அதற்கான முன்னேற்பாட்டு பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். மீனவர்கள் பழுதுகளை நீக்கி புதுப்பித்து தயார்நிலையில் வைத்து உள்ள தங்களது விசைப்படகுகளில் டீசல் நிரப்புதல், சீரமைக்கப்பட்ட வலைகளை ஏற்றுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

என்ஜின் சீராக இயங்குகிறதா? என்று மீனவர்கள் விசைப்படகுகளை கடலுக்குள் இயக்கி சோதனை ஓட்டம் நடத்தினர். தடைக்காலம் முடிந்து கடலுக்கு செல்வதால் மீன்கள் அதிகளவில் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் மீனவர்கள் உள்ளனர்.

# சென்னையில் சரக்கு ரெயில் தடம்புரண்டு விபத்து



சென்னை, ஜூன் 14

சென்னை எழும்பூரில் இருந்து செங்கல்பட்டை நோக்கி சரக்கு ரெயில் ஒன்று சென்று கொண்டிருந்தது. இந்த ரெயிலில் இணைக்கப்பட்டிருந்த 16 சரக்கு பெட்டிகளில் ஜல்லி கற்கள் ஏற்றப்பட்டிருந்தன.

டீசல் என்ஜின் கொண்டு இயக்கப்பட்ட இந்த சரக்கு ரெயில் தாம்பரம் ரெயில் நிலையம் அருகே வந்தபோது, திடீரென பலத்த சத்தத்துடன் ரெயிலின் என்ஜின் தடம் புரண்டது. உடனடியாக சுதாரித்துக் கொண்ட, ரெயில் என்ஜின் லோகோ பைலட் ரெயிலை நிறுத்திவிட்டு, இதுகுறித்து அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தார். மீட்பு ஊழியர்களுடன் விரைந்து வந்த ரெயில்வே அதிகாரிகள் என்ஜினை மீண்டும் தண்டவாளத்தில் தூக்கி நிறுத்தும் பணியில் ஈடுபட்டனர். முன்னதாக, ஜல்லிகற்கள்நிரப்பப்பட்ட16பெட்டிகளும்என்ஜினில் இருந்து கழற்றப்பட்டு, பின்நோக்கி பாதுகாப்பாக இழுத்து செல்லப்பட்டன. சரக்கு ரெயில் தடம்புரண்ட அதே நேரத்தில், எக்ஸ்பிரஸ் மற்றும் மின்சார ரெயில் சேவைகளில் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது.

# தாராபுரத்தில் குடிநீர் குழாய் உடைப்பு சீரமைப்பு



திருப்பூர், ஜூன் 14

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் பேருந்து நிலையம் அருகில் சாலையோரத்தில் சுண்ணாம்பு காடு கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் குழாய் பதிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையில் பேருந்து நிலையம் பகுதியில் குடிநீர் குழாயில் திடீரென உடைப்பு ஏற்பட்டது. இதனால் குடிநீர் வீணாகியது. இதையடுத்து உடைப்பு சீரமைக்கப்பட்டது.

இந்த நிலையில் ஏற்கனவே உடைப்பு ஏற்பட்ட அதே இடத்தில் நேற்று முன்தினம் மீண்டும் குழாய் உடைப்பு ஏற்பட்டது. இதுகுறித்த செய்தி 'தினத்தந்தி'யில் பிரசுரிக்கப்பட்டது. இதன் எதிரொலியாக நேற்று குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்து உடைப்பு ஏற்பட்ட இடத்தை ஆய்வு செய்தனர். பின்னர் உடைப்பை சரி செய்தனர்.



# 'தனிநபர், கவர்ச்சி அரசியலை பா.ஜ.க., செய்ய விரும்பவில்லை'

## த.வெ.க., அரசை விளாசிய வேலூர் இப்ராஹிம்

கிருஷ்ணகிரி, ஜூன் 14

"தனிநபர், கவர்ச்சி அரசியல் செய்ய பா.ஜ.க., விரும்பவில்லை. கொள்கை பிடிப்போடு செயல்படவே விரும்பும். த.வெ.க., அரசு, தி.மு.க.,வின் ஆட்சிக்கு ஸ்டிக்கர் ஒட்டி ஆட்சி நடத்துகிறது," என குற்றம்சாட்டினார்.

கிருஷ்ணகிரி, பா.ஜ.க., அலுவலகத்தில் மாவட்ட நிர்வாகிகளுடன் ஆலோசனைகூட்டம்நடந்தது.இதில்,பா.ஜ.க., சிறுபான்மை அணியின் தேசிய செயலாளர்வேலூர்இப்ராஹிம்கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். தொடர்ந்து, நிருபர்களிடம் அவர் கூறியதாவது:

பாரத பிரதமர் மோடி தலைமையிலான, 12 ஆண்டு கால, பா.ஜ.க., ஆட்சி நிறைவு பெற்றுள்ளது. தேசம் முழுவதும் இந்த சேவை, பணிகளைதமிழர்கள் வீடுகள் தோறும் கொண்டு செல்லும் வகையில், பா.ஜ.க., சார்பில் ஒவ்வொரு வீடுகளிலும், தன் தாயின் பெயரால் மரத்தை நட வேண்டும். பொதுமக்கள் அதிகம் உள்ள இடத்தில் துப்புரவு பணி, ரத்ததானம் செய்ய வேண்டும் என வலியுறுத்தினோம்.

பிரதமர் மோடி, 4,400 நாட்களை கடந்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதமராக சாதனை படைத்துள்ளார். கடந்த காலத்தில் பிரதமராக இருந்த நேரு சாதனையை முறியடித்துள்ளார். கடந்த கால காங்கிரஸ்., ஆட்சியில், நாடு பொருளாதாரத்தில், 11வது இடத்தில் பின்தங்கி இருந்தது. மோடி ஆட்சியில் இந்தியா, பொருளாதாரத்தில், 4வது இடத்தில் முன்னேறியுள்ளது. பெண்கள், விவசாயிகள், இளைஞர்கள், ஏழைமக்கள், என அனைத்து தரப்பு மக்களும் முன்னேற்றம் கண்டுள்ளோம். பா.ஜ.க., ஆட்சியில் மதக்கலவரத்தை ஒழித்துள்ளது. நாட்டின் பாதுகாப்பிலும் முன்னேற்றம் கண்டுள்ளோம். இதை எல்லா நாடுகளும் புகழ்கிறது. தமிழகத்திற்கு மட்டும் கடந்த, 12 ஆண்டுகளில், 14 லட்சம் கோடி ரூபாய் வழங்கி உள்ளது. திருக்குறளின் தொன்மையறிந்து, 12 மொழிகளில், மொழிபெயர்ப்பு செய்தது. பாராளுமன்றத்தில் தமிழர்களின் அடையாளமான செங்கோல் வைக்கப்பட்டது. ஆனைமங்கலம் செப்பேடு நெதர்லாந்தில் இருப்பதை அறிந்து, அதை அங்கிருந்து நம் நாட்டிற்கு பெற்றுத்தந்தபெருமையும்பிரதமர்மோடியை சேரும். இதுதவிர, குஜராத்தில் அவர் பேசும் போது நம் மொழிகளில் மூத்த மொழி தமிழ் என்கிறார்.

மெட்ரோ ரயில் திட்டம், ரயில் நிலையங்கள் புனரமைப்பு, 4,000 கி.மீ., தேசிய நெடுஞ்சாலை, அதிக மருத்துவ கல்லூரிகள் என தமிழகத்திற்கு தந்த திட்டங்கள் அதிகம். அதை தமிழகத்தில் எடுத்துக்கூறி தமிழகத்தில், பா.ஜ.க, ஆட்சி அமைய கடுமையாக உழைப்போம்.

பா.ஜ.க, தனிநபர் அரசியல், கவர்ச்சி அரசியல் செய்ய விரும்பாது. நாட்டின் நலன் என்ற கொள்கை பிடிப்போடு மட்டுமே இருப்போம். சொன்னால், அதை செய்வோம் என்ற நம்பிக்கையோடு வாக்குறுதிகள் அளிப்போம். காஷ்மீரில் மாநில சிறப்பு அந்தஸ்து ரத்து, அயோத்தியில் ராமர் கோவில், நாட்டில், 25 கோடி பேர் வறுமை கோட்டிலிருந்து மீட்பு என்ற சாதனைகளை செய்துள்ளோம்.

பிரதமர் மோடி மட்டுமல்ல, அவரது அமைச்சரவையில் ஒருவர் மீது கூட ஊழல் புகார் இல்லாத ஆட்சி. மாநிலத்திற்கான உரிமைகளை பெற்று தருகிறோம். கவர்ச்சியையும், தனிநபரை தலைவா எனக்கூறியும் செய்யும் அரசியல்செய்யவில்லை.த.வெ.க.,தலைவர் விஜய், தேர்தலுக்கு முன் பல்வேறு வாக்குறுதிகள் அளித்தார். அதில், எதை செய்தார்.

ஆட்சி பொறுப்பேற்ற அடுத்த நொடி முதல், அனைத்து பஸ்களிலும் பெண்களுக்கு இலவச பயணம் என்றார். முதல்வரான விஜய், அடுத்த நிமிடம், நாள், மாதமாவது அதை செய்தாரா. 2,500 ரூபாய் பெண்களுக்கு மாதம் வழங்கப்படும் என்றார், செய்தாரா. ஆனால் இங்கு தேர்தல் முடிவுகள் வெளியானபோது மேற்கு வங்கத்தில் முடிவுகள் வெளியாகி, பா.ஜ.க, ஆட்சி வந்தது. சுவேந்து அதிகாரிமுதல்வராகிமூன்றவாதுநாளில் மகளிர் இலவச பயணம் அமலுக்கு வந்துள்ளது.

மகாராஷ்டிராவில், மகளிருக்கு, 1,000 ரூபாய் வழங்கினோம். அடுத்த தேர்தலின் போது, 1,500 ரூபாய் எனக்கூறி, அதையும் வழங்கினோம். தற்போது அம்மாநிலத்தில், 1.30 கோடி மகளிர் அந்த தொகையை பெறுகின்றனர். இங்கு கடவுள் மறுப்பு காட்டுமிராண்டிகளும், நடிகர்கள் கவர்ச்சியையும் காட்டி ஓட்டுகளை பெற்று ஏமாற்றுகின்றனர். பாட்டிலுக்கு, 10 ரூபாய் என முன்னாள், தி.மு.க., அமைச்சர் செந்தில்பாலாஜியை கிண்டல் செய்தார்கள். தற்போது மதுவிலக்குத்துறை அமைச்சராக உள்ள விக்னேஷ் தொகுதியான கிணத்துக்கடவுக்கு நான் சென்றேன். அங்கு பஸ் ஸ்டாண்ட், பள்ளி அருகே மதுபாட்டிலுக்கு, 20 ரூபாய் வாங்குவதை ஆதாரத்துடன் வெளியிட்டேன். அதற்கு என்னபதில்.த.வெ.க.,தி.மு.க., ஆட்சிக்கு ஸ்டிக்கர் ஒட்டி ஆட்சி நடத்துகிறது.பெண்கள், தாய்மார்கள், குழந்தைகளை தொட்டால், பா.ஜ., ஆட்சியில் மறுநாளே என்கவுண்டர் நடக்கிறது. த.வெ.க., ஆட்சியில், த.வெ.க., பெண் நிர்வாகியை அக்கட்சியை சேர்ந்தவர்களே பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர். ஆனால், த.வெ.க.,வினர் ஒன்றும் புரியாமல் விழிக்கின்றனர், ஒரு மாவுக்கட்டு கூட இல்லை. பா.ஜ., ஆட்சியில் தான், பெண்களை தொட்டால், தோட்டாக்கள் பதில் சொல்லும் நிலை உள்ளது. தேர்தலில் வெற்றி, தோல்வி எங்களுக்கு இலக்கு அல்ல, நாட்டின் முன்னேற்றம் என்ற கொள்கைதான் முக்கியம். பா.ஜ.க,வில் தொண்டர்கள் மற்ற கட்சிகளை போல் பதவிக்காக வருபவர்கள் அல்ல. தேசத்தின் நலன் என்ற அடிப்படையில் இருப்பவர்கள். கொள்கைகள் புரியாத சிலர், அது அண்ணாமலையாக இருக்கட்டும், அவர் பின்னால் ஆட்டு மந்தை கூட்டம் போல சென்றவர்களாக இருக்கட்டும். அவர்கள், பா.ஜ.க,வை விட்டு சென்றதால் கட்சிக்கு எந்த இழப்பும் இல்லை.

விஜயதாரணி போல சிலர் வந்தார்கள், சென்றார்கள் என்றே பார்க்க வேண்டும், அது போலத்தான் அண்ணாமலையும். சில்லரைக்காக அவர் செயல்படாமல் சித்தாந்தத்திற்காக செயல்பட்டிருந்தால் மீண்டும் வருவார், இல்லாவிட்டால் தேவையில்லை. பா.ஜ.க, முன்பை விட முனைப்பாக செயல்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# திருச்சியில் பிரபல ரவுடி கொலை மேலும் இரண்டு பேர் கைது

திருச்சி, ஜூன் 14

திருச்சி அரியமங்கலம் பகுதியைச் சேர்ந்த பிரபல ரவுடி பாதுஷா கடந்த 6ஆம் தேதி காட்டூர் பகுதியில் மர்ம நபர்களால் வெட்டி படுகொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் ஏற்கனவே சூர்யா, குமார், பிரசாத் ஆகிய மூன்று பேர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், கொலைக்கு உடந்தையாக இருந்த தீபக் மற்றும் மணிகண்டன் ஆகிய இருவரையும் தனிப்படை போலீசார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.



DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.